பாமாலை 122 ஆ, மாந்தரே நாம் பாடுவோம்

அல்லேலூயா ! அல்லேலூயா ! அல்லேலூயா !

1 ஆ, மாந்தரே நாம் பாடுவோம்
இந்நாளில் சாவை வென்றோராம்
விண் மாட்சி வேந்தர் போற்றுவோம்
அல்லேலூயா!

2 அஞ்ஞாயிறு அதிகாலை
நல் மாதர் மூவர் கல்லறை
சென்றாரே காண தேகத்தை
அல்லேலூயா!

3 பயந்த சீஷர் ராவிலே
கண்டார் கேட்டார் தம் நாதரே
என் சமாதானம் தாசரே
அல்லேலூயா!

4 காணாமல் நம்பின் பாக்கியர்
மாற வி ஸ் வாசம் வைப்பவர்
மா நித்ய ஜீவன் பெறுவர்
அல்லேலூயா!

5 மா தூயதாம் இந்நாளில் நாம்
நம் பாடல் ஸ்தோத்ரம் படைப்போம்
பரனைப் போற்றி மகிழ்வோம்
அல்லேலூயா!